செ.வெ.எண்:155 நாள்:09.03.2018

இணையதள மின் சேவை மூலம் 15 வகையான சான்றிதழ்களை வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்ட பொதுமக்கள் இத்திட்டத்தினை பயன்னடுத்திக்கொள்ள வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்.

----

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் மின்னாளுமை திட்டத்தின் கீழ் இ-சேவை மையம் வழியாக பொதுமக்களுக்கு சாதிச்சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், முதல் பட்டதாரி சான்றிதழ் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண் என்பதற்கான சான்றிதழ் ஆகிய 5 வகையான சான்றிதழ்கள் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அத்துடன், மேலும் கீழ்க்கண்ட 15 வகையான சான்றிதழ்களை இணையதள மின் சேவை மூலம் வழங்கிடும் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

1. விவசாய வருமானச் சான்றிதழ் (Agriculture Income Certificate)
2. சிறு, குறு விவசாயி சான்றிதழ் (Small / Marginal Farmers' Certificate)
3. கலப்புத் திருமணச் சான்றிதழ் (Inter-caste Marriage Certificate)
4. விதவைச் சான்றிதழ் (Widow Certificate)
5. வேலையின்மைச் சான்றிதழ் (Unemployment Certificate)
6. குடும்ப குடிப் பெயர்வு சான்றிதழ் (Family Migration Certificate)
7. கல்வி ஆவணங்கள் பேரிடரால் தொலைந்தமைக்கானச் சான்றிதழ் (Certificate for the loss of Educational Records due to the Disasters)
8. ஆண் குழந்தை இன்மைச் சான்றிதழ் (No Male Child Certificate)
9. திருமணமாகவில்லை என்பதற்கான சான்றிதழ் (Unmarried Certificate)
10. வாரிசு சான்றிதழ் (Legal Heir Certificate)
11. செல்வ நிலைச் சான்றிதழ் (Solvency Certificate)
12. இருப்பிடச் சான்றிதழ் (Residence Certificate)
13. அடகு வணிகர் உரிமம் (Pawn Brokers Licence)
14. வட்டிக்கு பணம் கொடுப்போர் உரிமம் (Money Lender Licence)

15. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான சான்றிதழ் (Other Backward Community Certificate)

மேற்படி 15 வகையான சான்றிதழ்களை பெறுவதற்கு பொதுமக்கள்/ விவசாயிகள் மற்றும் மாணவர்கள் தங்கள் அருகாமையில் உள்ள பொது சேவை மையம்/ இ-சேவை மையங்களுக்கு சென்று விண்ணப்பிக்கும் போது, விண்ணப்ப எண்ணுடன் ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். இவ்விவரம் அவர்களின் கைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். விண்ணப்பம் ஏற்கப்பட்டு சான்றிதழ் தயாரானதும் விண்ணப்பதாரருக்கு இணையதள முகவரியுடன் குறுஞ்செய்தி அனுப்பபப்படும். இக்குறுஞ்செய்தி பெறப்பட்டவுடன் விண்ணப்பதாரர் வீட்டில் இருந்தவாறே இணையதளம் மூலமாக சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது அருகாமையிலுள்ள பொது சேவை மையம்/இ-சேவை மையம் மூலமாக சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவத்துள்ளார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.